# இலங்கையில் உள்ளூராட்சியும் ஜனநாயக நெருக்கடிகளும்: மட்டக்களப்பு மாநகரப் பிரதேசத்தினை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

**எம்.ஏ.எம். பௌசர்**
சிரேஷ்ட விரிவுரையாளர்
அரசியல் விஞ்ஞானத்துறை
இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Correspondence: fowsarma@seu.ac.lk

**கட்டுரைச் சுருக்கம்**

இலங்கையில் உள்ளூர் ஆட்சி மற்றும் ஜனநாயகம் என்பவற்றுக்கான சிறந்த நிறுவனத் தளமாக உள்ளூராட்சி மன்றங்கள் விளங்குகின்றன. உள்ளூர் ஜனநாயகத்தில் பரந்தளவான சிவில் சமூக ஈடுபாடும் உள்ளூர் வளங்களை முறையாக முகாமைப்படுத்தலும் இன்றியமையாததாகும். எனினும் இலங்கையில் உள்ள உள்ளூராட்சி அரசாங்கங்களுள் பெரும்பாலானவை உள்ளூர் மட்டத்தில் ஜனநாயகத்தினையும் நல்லாட்சியினையும் கட்டியெழுப்புவதில் தோல்வி கண்டுள்ளன. அண்மைய ஆய்வுகளின்படி இலங்கையின் உள்ளூர் மட்ட அரசாங்கங்களின் செயற்றிறன் வீழ்ச்சியடைந் துள்ளதுடன் மக்களின் உண்மையான பிரச்சினைகள் உள்ளூர் அரசாங்கங்களினால் அலட்சியப் படுத்தப்படுகின்ற அதேவேளை, குறித்த மாநகர சபையின் அதிகாரம் தொடர்பில் அப்பிரதேசத்தில் வாழும் மக்களிடம் காணப்படுகின்ற கருத்து நிலைகளும் தெளிவற்றதாக உள்ளன. இந்தப் பின்னணியில் இவ்வாய்வு கிழக்கிலங்கையில் உள்ள மட்டக்களப்பு மாநகர சபையுடன் தொடர்புடைய ஜனநாயக ஆட்சி நெருக்கடிகள் குறித்ததொரு அரசியல் பகுப்பாய்வினை மேற்கொண்டுள்ளது. இவ்வாய்வு விபரணப் பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டதாகும். ஆய்வுக்கான தரவுகள் பல்வேறு முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத் தரவு மூலாதாரங்களினூடாக பெறப்பட்டுள்ளன. ஆய்வினூடாகப் பெறப்பட்ட முடிவுகளின்படி உள்ளூர் ஜனநாயகத்திற்கு முக்கிய தடையாக இருக்கும் ஒரு காரணியாக குறித்த மாநகர சபைக்கு பரவலாக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் போதாமையினைக் குறிப்பிட முடியும். மட்டக்களப்பு மாநகர அரசாங்கம் தமக்கு அதிகாரமளிக்கப்பட்ட விடயங்களில் சுயாதீனமாகச் செயற்படுவதற்கு மத்தியரசின் ஊடான தடைகள் ஏற்படுகின்ற விடயமும் இங்கு கவனிக்கத்தக்கது. இதனால் உள்ளூர் ஜனநாயகத்தினை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதில் மட்டக்களப்பு மாநகர சபை பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்கின்றன. உள்ளூர் ஜனநாயகத்துடன் தொடர்புடைய பங்கேற்புச் செயன்முறை, அரசியல் கட்சிச் செயற்பாடு, பிரதிநிதித்துவப் பண்பு, மக்கள் பொறுப்புக் கூறல் போன்றவற்றிலும் பல்வேறு பிரச்சினைகள் காணப்படுகின்றன. இப் பிரச்சினைகளை முறையாக அடையாளப்படுத்தி ஜனநாயக ஆட்சியினை கொண்டு நடாத்துவதற்கான உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டியது, குறித்த மாநகர சபையின் பொறுப்பாகும்.

**பிரதான சொற்கள்:** உள்ளூராட்சி, உள்ளூர் ஜனநாயகம், மட்டக்களப்பு மாநகர சபை

## 1. அறிமுகம்

உள்ளூர் மட்டங்களில் ஜனநாயகத்தினைக் கட்டியெழுப்புவதில் உள்ளூராட்சி நிறுவனங்கள் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளன. இவை உள்ளூர் மட்டங்களில் வசிக்கின்ற பிரஜைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக் கூடிய நிறுவன அமைப்புக்களாக உள்ளன. இதனால் இந்நிறுவனங்கள் வழங்குகின்ற சேவைகளும் அவற்றின் நாளாந்தச் செயற்பாடுகளும் தனித்துவமானவையாகும். விளிம்பு நிலைப் பிரதேசங்களில் வாழ்கின்ற மக்களை அரசியல் ரீதியாக வலுவூட்டுவதற்கும் உள்ளூராட்சி மன்றங்கள் துணைநிற்கின்றன. இதனாலேயேதான் உலகில் உள்ள ஏராளமான நாடுகள் அவற்றின் அதிகாரப் பரவலாக்கச் செயன்முறையில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு முக்கிய இடத்தினைக் கொடுத்துள்ளன. அரசு மற்றும் அரசுசாரா அமைப்புக்களும் உள்ளூராட்சி மன்றங்களின் முக்கியத்துவம் கருதி, அவற்றின் உள்ளார்ந்த திறனைப் பலப்படுத்துவதற்கான பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டுவருவதனை அவதானிக்க முடிகின்றது (Kumar, 2006).

உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்களுடன் மிக நெருங்கிச் செயற்படுகின்ற அமைப்புக்களாக இருப்பதனால் அவற்றின் மூலம் ஜனநாயகத்தினைப் பலப்படுத்த முடிவதுடன் ஒரு நாட்டின் அரசியலை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்லக்கூடிய எதிர்காலத் தலைமைகளுக்கு போதிய ஜனநாயகப் பயிற்சியினையும் வழங்கமுடிகின்றது. இதனால் உள்ளூராட்சி மன்றங்களுக்கும் ஜனநாயகத்திற்கும் இடையே மிகவும் அண்மித்த உறவு நிலவுகின்றது. இன்றைய சூழலில் உள்ளூராட்சி மன்றங்களின் வெற்றி - தோல்வி என்பது அவை ஜனநாயகத்தின்பால் காட்டுகின்ற ஈடுபாட்டினைக் கொண்டே மதிப்பிடப்படுகின்றன. இத்தகைய உள்ளூர் அரசியலின் ஜனநாயக ஈடுபாட்டினை கோட்பாட்டு ரீதியாக வரையறுப்பதற்கான முயற்சிகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதன் பயனாக உருவான ஒரு கோட்பாட்டு எண்ணக்கருவே உள்ளூர் ஜனநாயகம் குறித்த எண்ணக்கருவாகும். இவ்வெண்ணக்கரு அலெக்சிஸ் டீ டொக்குவில் மற்றும் ஜே.எஸ். மில் போன்ற அரசியல் அறிஞர்களின் எழுத்துக்களில் முக்கிய இடத்தினைப் பிடித்துள்ளது.

உள்ளூராட்சி நிறுவனங்களினூடாக வெளிப்படும் ஜனநாயகச் செயன்முறையினை 'உள்ளூர் ஜனநாயகம்' என அழைப்பர். இது உள்ளூர் மட்ட பிரஜைகளின் பங்கேற்புடன் கூடிய ஆட்சிச் செயன்முறையாகும். இவ் உள்ளூர் ஜனநாயகம் தீர்மானம் எடுத்தலில் பரந்தளவான பிரஜைகள் பங்கேற்பினை வேண்டிநிற்பதுடன் வெவ்வேறு வழிகளின் ஊடான சமுதாய உள்ளீர்ப்பினையும் வலியுறுத்தி நிற்கின்றது. பிரச்சட் - Prachett (2004) என்ற அறிஞர் குறிப்பிடுவதன்படி உள்ளூர் ஜனநாயகத்தின் நிறுவனத்தளமாக உள்ளூராட்சி நிறுவனங்கள் காணப்படுகின்றன. உள்ளூர் ஜனநாயகம் அரசியல் பங்கேற்புக்கான சிறந்த வாய்ப்புக்களைக் கொடுப்பதுடன் சமூக உள்ளீர்ப்புக்கான ஒரு கருவியாகவும் விளங்குகின்றது. இவ்வடிப்படை விளக்கங்களினூடாகவே இலங்கையின் உள்ளூராட்சி நிறுவனங்களையும் அவற்றின் ஜனநாயக வகிபாகத்தினையும் நோக்க வேண்டியிருக்கின்றது.

இலங்கை மிக நீண்டகால ஜனநாயக பாரம்பரியங்களைக் கொண்ட ஒரு நாடு என்றவகையில் ஆரம்பகாலம் முதல் உள்ளூராட்சி அரசாங்க முறைமையினை செயற்படுத்தி வந்துள்ளது. புராதன மன்னராட்சிக் காலத்திலும் இலங்கையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் பல வெற்றிகரமாகத் தொழிற்பட்டதாக வரலாற்று ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. எனினும் நவீனமயப்படுத்தப்பட்ட உள்ளூராட்சிக் கட்டமைப்பு ஆங்கிலேயர் ஆட்சியிலேயே அறிமுகமானது. ஆங்கிலேயர் அறிமுகப்படுத்திய அரசியல் மற்றும் நிறுவன மறுசீரமைப்புக்கள் உள்ளூராட்சி முறைமையில் முக்கிய சில மாற்றங்களைக் கொண்டுவந்தன. சுதந்திரத்திற்குப் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களும் உள்ளூராட்சியில் கூடிய கவனம் செலுத்தியிருந்தன. உள்ளூராட்சி விடயத்தில் சில நிறுவன ரீதியான மறுசீரமைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டபோதிலும் உள்ளூராட்சியின் தேவையினை சுதந்திர இலங்கையின் அரசாங்கங்கள் உணர்ந்து செயற்பட்டன.

சமகாலத்தில் உள்ளூராட்சி நிறுவனங்கள் இலங்கையின் அரசாங்கப் படிநிலை அமைப்பில் மூன்றாவது மட்டத்தினைப் பிரதிநிதித்துவம் செய்கின்றன. முதலாவது மட்டத்தில் மத்திய அரசாங்கமும் இரண்டாவது மட்டத்தில் மாகாண அரசாங்கங்களும் செயற்பட, அவற்றின் ஆளுகைக்கு உட்பட்ட மூன்றாவது படிநிலையிலுள்ள அரசாங்கப் பொறிமுறையாக உள்ளூராட்சி நிறுவனங்கள் உள்ளன. தற்போது மூன்று விதமான உள்ளூராட்சி மன்றங்கள் இலங்கையில் நடைமுறையிலுள்ளன. அவை பிரதேச சபை, நகர சபை, மாநகர சபை என்பனவாகும். பிரதேச சபைகள் சமூக, பொருளாதார வளர்ச்சி குறைந்த பிரதேசங்களில் நிறுவப்படுகின்ற அதேவேளை, நகர சபைகளும் மாநகர சபைகளும் வளர்ச்சியடைந்த நகரங்களில் அமைக்கப்படுகின்றன (Hettige, 2008; Leitan, 2010). இவ்வுள்ளூராட்சி நிறுவனங்களை அரசிதழினூடாக பிரகடனப்படுத்தி உருவாக்குவதில் உள்ளூராட்சிக்கு பொறுப்பான அமைச்சர் முக்கிய பங்குவகிக்கின்றார். அதேநேரம், உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாட்டு நடைமுறைகளைக் கண்காணிக்கும் பொறுப்பு அந்தந்த மாகாண அரசாங்கங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது (புஞ்சிகேவா, 2007).

இலங்கையில் உள்ளூர் ஜனநாயகத்தினை செயற்படுத்தக்கூடிய அமைப்புக்களாக மேற்குறிப்பிட்ட உள்ளூராட்சி நிறுவனங்களைக் கருதமுடியும். இந்நிறுவனங்கள் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு செயற்படத்தக்கதாக உருவாக்கப்பட்டிருப்பதுடன் குடிமக்களின் பங்குபற்றுதலுடன் தீர்மானங்களை எடுப்பதற்கும் வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. எனினும் நடைமுறையில் உள்ளூராட்சி நிறுவனங்கள் மக்கள் பங்கேற்புடன் கூடிய ஜனநாயக ஆட்சியினை செயற்படுத்துகின்றனவா? என்ற விடயம் கேள்விக்குரிய ஒன்றாகவே உள்ளது. அதேவேளை, உள்ளூர் ஜனநாயகத்தினைக் கட்டியெழுப்புவதில் இலங்கையின் உள்ளூராட்சி

மன்றங்கள் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதாக அண்மைய சில ஆய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதிலும் குறிப்பாக, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் கடந்தகால உள்நாட்டு யுத்தத்தின் காரணமாக உள்ளூர் மட்டத்தில் ஜனநாயக ஆட்சியினை செயற்படுத்த முடியாதளவுக்கு பல நெருக்கடிகளை எதிர்கொண்டு வருவதாக அவ்வாய்வுகள் சுட்டிக்காட்டுகின்றன (Uyangoda & De Mel, 2012; Bigdon, 2006).

இந்தவகையில் இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களில் ஒன்றாக விளங்கும் மட்டக்களப்பு மாநகர சபையுடன் தொடர்புபடுத்தி இவ்வாய்வு கட்டமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வுக்கெனத் திரட்டப்பட்ட தரவுகளிலிருந்து இம்மாநகரம், நீண்டகாலமாக உள்ளூர் நிருவாகத்தினை முறையாகக் கொண்டு நடாத்துவதற்கான அதிகாரம் மற்றும் கொள்கைசார் சட்ட, நிறுவனப் புறவமைப்புக்களையும் கொண்டுள்ளது. எனினும் தற்போதைய சூழ்நிலையில் உள்ளூர் ஜனநாயகம் தொடர்பில் குறிப்பிடும்படியான முன்னேற்றங்களை இம்மாநகரம் அடையவில்லை. அதேவேளை, குறித்த மாநகர சபை அங்கு வசிக்கின்ற மக்களின் பார்வையில் குறைந்தபட்ச ஜனநாயகத்தினைக் கொண்ட ஒரு அமைப்பாகவே நோக்கப்படுகின்றது. எனினும் தற்போது போருக்குப் பின்னரான புதிய சூழ்நிலையொன்று உருவாகியுள்ளது. இந்நிலையில் அரச மறுசீரமைப்புடனான ஜனநாயக ஆட்சி முறையொன்றின் விரிவாக்கம் மற்றும் வலுவூட்டல் மிகவும் இன்றியமையாததாகும். இச்செயன்முறையில் உள்ளூராட்சி மன்றங்கள் கணிசமான பங்கினை வகிக்கமுடியும். இந்தப்பின்னணியில் இவ்வாய்வு கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு மாநகரப் பிரதேசத்தில் உள்ளூர் ஜனநாயக ஆட்சி எதிர்கொள்ளும் நெருக்கடிகள் குறித்ததொரு அரசியல் பகுப்பாய்வினை மேற்கொள்கொள்கின்றது.

## 2. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு விபரணப் பகுப்பாய்வு முறையினை அடிப்படையாகக் கொண்டதாகும். இவ்வாய்வில் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் நிலைத் தரவுகள் உள்ளூர் ஜனநாயகத்துடன் தொடர்புபட்ட மேயர், எதிர்க்கட்சித் தலைவர், மாநகர சபை உறுப்பினர்கள், மாநகர ஆணையாளர், நிருவாக அதிகாரிகள், அரசியல் கட்சிப் பிரதிநிதிகள், பிரஜைகள், சிவில் சமூகப் பிரதிநிதிகள், சமூக மட்ட அமைப்புக்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றிடமிருந்து திரட்டப்பட்டுள்ளன. இரண்டாம் நிலைத் தரவுகள் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வறிக்கைகள், ஆய்வு மாநாட்டு வெளியீடுகள் மற்றும் இணையத்தள குறிப்புக்களிருந்து பெறப்பட்டுள்ளன.

ஆய்வுக்கான தரவுகளை திரட்டும்போது திறந்த வினாக்களைக் கொண்ட கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து மற்றும் பகுதியளவு கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்து ஆகிய இரு வகையான தரவு சேகரிப்பு உத்திகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இங்கு பொதுஜனப் பிரதிநிதிகளிடமிருந்து தரவுகளைப் பெறுவதற்காக திறந்த வினாக்கள் சிலவற்றை உள்ளடக்கிய கட்டமைக்கப்பட்ட வினாக்கொத்துக்கள் (190 பொதுமக்கள்) விநியோகிக்கப்பட்டன. உள்ளூர் ஜனநாயகத்துடன் தொடர்புபட்டவர்களிடமிருந்து தரவுகளைப் பெறுவதற்காக கட்டமைக்கப்படாத வினாக்களைக் கொண்ட நேர்காணல் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஆய்வுப் பிரதேசங்களின் உள்ளூர் ஜனநாயகம் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெறுவதற்காக நேர்காணல் (12), குழுக்கலந்துரையாடல் (03) ஆகிய நுட்பமுறைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. பல்வேறு மூலாதாரங்களிலிருந்து ஆய்வுக்கென திரட்டப்பட்ட தரவுகள் விபரண முறையில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. பகுப்பாய்வின் முடிவுகள் எழுத்துக்களைக் கொண்டு விபரிக்கப்பட்டுள்ளன.

## 3. மட்டக்களப்பு மாநகர சபை

மட்டக்களப்பு இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் உள்ள ஒரு மாநகரமாகும். இது வடக்கில் ஏறாவூர் பற்றுப் பிரதேச சபை, கிழக்கில் வங்காள விரிகுடா, தெற்கில் காத்தான்குடி நகர சபை மற்றும் மேற்கில் மட்டக்களப்பு நீரேரியினையும் கொண்டு அமைந்துள்ளது. மட்டக்களப்பு கொழும்பிலிருந்து சுமார் 303 கிலோமீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. ஆரம்பத்தில் நகர சபையினைக் கொண்டிருந்த மட்டக்களப்பு நகரம் 1967இல் மாநகர சபையாகத் தரமுயர்த்தப்பட்டது. வடக்கு கிழக்கில் யுத்தத்தினால் பல வருடங்களாகப் பாதிக்கப்பட்டிருந்த இம்மாநகர சபையின் ஜனநாயக ஆட்சிச் செயற்பாடுகள் 2008 மார்ச்சில் இடம்பெற்ற மாநகர சபைத் தேர்தலுடன் மீள் ஸ்தாபிக்கப்பட்டது.

இறுதியாக மட்டக்களப்பு மாநகர சபைக்கான தேர்தல் 2018ஆம் ஆண்டு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கதாகும் (மட்டக்களப்பு மாநகர சபை, 2012).

மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40ஆவது பிரிவு மட்டக்களப்பு மாநகர சபைக்கான பொதுவான நிர்வாக அதிகாரங்களைப் பட்டியல்படுத்தியுள்ளது. அவை ஊழியர்களை நியமித்தல், சொத்துக்களை கையேற்றல், அனுமதிப்பத்திரங்களை விநியோகித்தல், சட்ட நடவடிக்கைகள் எடுத்தல், வரவுசெலவுத் திட்டத்தினை தயாரித்தல் போன்றனவாகும். இவைதவிர சட்டத்தின் மூலம் அதிகாரமளிக்கப்படாத கட்டிடங்களை அகற்றுதல், உட்கட்டமைப்பு சேவைகளை வழங்குதல், பொது நோக்கத்திற்காக நிலங்களை கையேற்றல் போன்ற அதிகாரங்களையும் இம்மாநகர சபை பெற்றுள்ளது. மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 46ஆவது பிரிவு பின்வரும் மேலதிக கடமைகளையும் மாநகர சபைக்கு ஒப்படைத்துள்ளது. அவை பொது வீதிகளை சுத்தப்படுத்தலும் பராமரித்தலும், பொது வீதிகளை விரிபுபடுத்தலும் மேற்பார்வை செய்தலும், பொதுப் பயன்பாட்டு சேவைகளை வழங்குதல், பொதுச் சுகாதாரத்தினை மேம்படுத்துதல் போன்றனவாகும்.

இத்தகைய சட்ட ஏற்பாடுகளுக்குட்பட்டு வீதியமைத்தலும் பராமரித்தலும், பொதுச் சுகாதாரம் பேணுதல், பொதுப் பயன்பாட்டுச் சேவைகள், அபிவிருத்தியும் நலனோம்பலும், கலாசார மேம்பாடு, சட்டமும் ஒழுங்கும் ஆகிய கடமைப் பொறுப்புக்களை மட்டக்களப்பு மாநகர சபை அதன் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட சபையினூடாகவும் முன்னர் குறிப்பிடப்பட்ட பல்வேறு நிருவாகப் பிரிவுகளினூடாகவும் நிறைவேற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இம்மாநகர சபை தமக்கான நிதியினை மத்திய, மாகாண அரசுகளின் ஒதுக்கீடுகள், வரிகளை அறவிடல், கட்டிடங்களை குத்தகைக்கு விடல், ஏனைய கட்டணங்கள், நன்கொடைகள் முதலான மூலங்களிலிருந்து பெறுகின்றது. எனினும் இச்சபை நிதித் தேவைகளுக்காக பெருமளவு மத்திய அரசிலேயே தங்கியிருக்க வேண்டியுள்ளது.

## 4. பகுப்பாய்வுச் சுட்டிகள்

உள்ளூர் ஜனநாயகம் தொடர்பிலான கோட்பாட்டு மற்றும் அனுபவ ஆய்வுகளிலிருந்து உள்ளூர் ஜனநாயகம் என்பது உள்ளூர்மட்ட பிரஜைகளின் பங்கேற்புடன் கூடியதொரு ஆட்சிச் செயன்முறை என வரையறுக்கலாம். இவ் உள்ளூர் ஜனநாயகம் தீர்மானம் எடுத்தலில் பரந்தளவான பிரஜைகள் பங்கேற்பினை வேண்டிநிற்பதுடன் வெவ்வேறு வழிகளின் ஊடான சமுதாய உள்ளீர்ப்பினையும் வலியுறுத்தி நிற்கின்றது. இவ் ஜனநாயகம் இருப்புக்கொள்ளும் தளமாக உள்ளூராட்சி அல்லது பிரதேச அரசாங்கங்கள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

பிரஜாவுரிமை, சமுதாய உணர்வு, பிரதிபலிப்புத் தன்மை, அரசியல் கல்வி மேம்பாடு, நல்லாட்சி, சமூக நல்வாழ்வு என்பவற்றுக்கு உரித்தானதொன்றாக நோக்கப்படும் இவ் உள்ளூர் ஜனநாயகத்தின் தரத்தினை அல்லது நிலையினை மதிப்பீடு செய்வதற்கு பல்வகைப்பட்ட சுட்டிகளை ஆய்வாளர்கள் பயன்படுத்தியுள்ளனர். இதன்படி வெல்பேர்க் மற்றும் கெட்டஸ் (as cited in Ehsan, 2002) ஆகியோர் உள்ளூர் ஜனநாயகத்தின் நான்கு அடிப்படைகளையும் பகுப்பாய்வு செய்வதற்கான ஒட்டுமொத்த ஜனநாயக மேம்பாட்டு அணுகுமுறை ஒன்றினை பரிந்துரைத்துள்ளனர்.

உள்ளூர் சுயாட்சியுடன் தொடர்புடைய மரபுசார் பெறுமானங்களை ஆராய்கையில் கிஜல்பேர்க்; சுயாட்சி, பங்கேற்பு, வினைத்திறன் ஆகிய மூன்று அடிப்படைகளை பட்டியலிட்டுள்ளார் (as cited in Ehsan, 2002). மேற்கு ஐரோப்பிய நாடுகளின் உள்ளூர் ஜனநாயகம் தொடர்பான ஆய்வொன்றில் உள்ளூர் ஜனநாயகத்துடன் தொடர்புடைய பிரஜைகளின் திறன், அரசியல் நம்பிக்கை, பிரஜைகள் திருப்தி, செயற்பாட்டு பங்கேற்பு ஆகிய நான்கு பரிமாணங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன (Mouritzen, Rose, & Denters, 2009). உள்ளூர் அதிகார சபைகள் தொடர்பான நோர்வே சங்கம் மற்றும் ஒஸ்லோ பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத் துறை (The Norwegian Association of Local Authorities and Department of Political Science, University of Oslo, 2009) ஆகியன இணைந்து நடாத்திய ஆய்வொன்றில் உள்ளூர் ஜனநாயகத்தினை மதிப்பீடு செய்வதற்கான சுட்டிகளாக நம்பகமான ஆட்சி, பொறுப்புடைய ஆட்சி, பதிலிறுத்தல் தன்மையுடைய ஆட்சி, செயற்றிறனுள்ள ஆட்சி ஆகிய சுட்டிகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

கபோர் சூஸ் - Gabor Soos (2001) என்பவர் செக் குடியரசு, மொங்கோலியா நாட்டினை அடிப்படையாகக் கொண்டு உள்ளூர் அரசாங்க செயலாற்றுகை அளவீடுகள், உள்ளூர் அரசாங்க

முறையின் பண்புகள், உள்ளூர் நிறுவனங்கள், உள்ளூர் அரசியல் கலாசாரம் ஆகிய அம்சங்களை உள்ளூர் ஜனநாயகத்திற்கான சுட்டிகளாக அடையாளப்படுத்தியுள்ளார். மேற்கூறப்பட்டவாறு உள்ளூர் ஜனநாயகத்தின் தரத்தினை மதிப்பீடு செய்வதற்கு பரந்தளவிலான சுட்டிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இச்சுட்டிகள் குறித்த நாடுகளின் அல்லது பிரதேசங்களின் தன்மை, அந்நாடுகளின் உள்ளூராட்சி மன்றங்களின் பண்புகள் மற்றும் செயற்பாடுகள் போன்ற விடயங்களைக் கருத்திற்கொண்டு வடிவமைக்கப்பட்டிருப்பதனை அறிய முடிகின்றது.

மேலே பட்டியற்படுத்தப்பட்டுள்ள உள்ளூர் ஜனநாயகச் சுட்டிகளைத் தழுவி ஆய்வுப் பிரதேச சூழலுக்குப் பொருத்தமான மதிப்பீட்டுச் சுட்டிகளாக பின்வரும் எட்டுச் சுட்டிகள் இவ்வாய்வில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இச்சுட்டிகளுள் குறிப்பிட்ட சில சுட்டிகள் மோதல் நிலைமாற்றம் மற்றும் நல்லாட்சி தொடர்பான ஆய்வின் போது கிறிஸ்டைன் பிக்டன் என்பவரால் பயன்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. அச்சுட்டிகளாவன: வினைத்திறனும் விளைதிறனும், தொழில்சார் உள்ளூர் தலைமைத்துவம், சமத்துவமும் உள்வாங்கலும், வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல், பிரஜைகள் பங்கேற்பு, கருத்தொருமைப்பாடு சார்ந்த இணக்கப்பாடு, சட்டத்தின் ஆட்சி.

## 5. பகுப்பாய்வும் முடிவுகளும்

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ள மட்டக்களப்பு மாநகரப் பிரதேசத்தில் நிலவுகின்ற உள்ளூர் ஜனநாயகத் தன்மையினை மதிப்பீடு செய்வதற்கான பகுப்பாய்வுச் சுட்டிகளாக வினைத்திறனும் விளைதிறனும், தொழில்சார் உள்ளூர் தலைமைத்துவம், சமத்துவமும் உள்வாங்கலும், வெளிப்படைத் தன்மை, பொறுப்புக்கூறல், பிரஜைகள் பங்கேற்பு, கருத்தொருமைப்பாடு சார்ந்த இணக்கப்பாடு, சட்டத்தின் ஆட்சி என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. இச்சுட்டிகள் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவம் ஆகிய இரு உள்ளூர் ஜனநாயக மாதிரிகளிலிருந்தும் பெறப்பட்டதாகும்.

### 5.1 வினைத்திறனும் விளைதிறனும்

வினாக்கொத்து, நேர்காணல், சிவில் சமூக அமைப்புக்களுடனான கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளின் அடிப்படையில் மட்டக்களப்பு மாநகராட்சியின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் தொடர்பில் மிகுந்த அதிருப்தியின்மை நிலவுகின்றது. இதற்கான பிரதான காரணங்களாக சுயாட்சிக்குரிய அதிகாரங்களின்மை, கட்சி ரீதியான செயற்பாடுகள், உள்ளூர் நிறுவனங்களுடனான ஒத்துழைப்பு குறைவாக இருத்தல், நிதிப்பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை, பௌதீக வளப்பற்றாக்குறை, யுத்த சூழ்நிலை காரணமாக நீண்டகாலமாக மாநகர சபை செயற்பட முடியாமல் இருந்தமை என்பவற்றை சுட்டிக்காட்ட முடியும்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட மாநகரப் பிரதிநிதியொருவர், ''மாநகர சபை நீண்டகாலம் செயற்பாட்டில் இருக்கவில்லை. அதன் செயற்பாடுகள் மாநகர ஆணையாளர் ஒருவரின் தலைமையின் கீழே முன்னெடுக்கப்பட்டு வந்தன. மாநகர சபை அதற்கான போதுமான நிதியினைப் பெற்றுக்கொள்வதில் பிரச்சினைகளை எதிர்கொள்கின்றது. யுத்த அபாய நிலைகளிலிருந்து தற்போதுதான் மாநகர சபை மீண்டு வந்திருக்கின்றது. சபைப் பிரதிநிதிகள் கட்சியின் தொண்டர்களாக மக்களால் தெரிவு செய்யப்பட்டிருக்கின்றார்கள். ஊழியர்கள் நீண்டகால முரண்பாட்டின் விளைவாக போதுமான செயற்பாட்டு அனுபவம் இன்றி இருக்கின்றனர். எமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களும் போதுமானவை அன்று. அதேவேளை சபை விரும்பிய அபிவிருத்தி வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு போதுமான நிதியும் இல்லை. இதுவே இம்மாநகர சபையின் வினைத்திறன் இன்மைக்கான காரணமாகும்'' எனக் குறிப்பிடுகின்றார் (நேர்காணல் இல.3).

எனினும் மாநகர சபை அதிகாரிகள், கவுன்சிலர்கள் என்போரிடமிருந்து பெறப்பட்ட தரவுகளின்படி மாநகர சபை பயனுள்ள பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளன. சூழல் பாதுகாப்புக்கான நடவடிக்கை எடுத்தல், திண்மக் கழிவுகளை அகற்றுதல், நீர் நிலைகளைப் பேணுதல், மரங்களை நடுதல், சிறுவர் ஆரம்பப் பாடசாலைகளை அமைத்தல், தொழில்நுட்பக் கல்வியினை ஊக்குவித்தல், வாசிகசாலை அமைத்தல், இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல் முதலான செயற்பாடுகளில் மட்டக்களப்பு மாநகர சபை ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பிலான மக்கள் அபிப்பிராயத்தினை நோக்குகையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட 90 பேரினுள் கணிசமான தொகையினர் சபையின் வினைத்திறன் மிக்க செயற்பாடு

தொடர்பில் அதிருப்தியினை வெளியிட்டுள்ளனர். மிகக்குறைந்தளவான தொகையினர் மட்டுமே சபையின் வினைத்திறன் மிக்க செயற்பாடு தொடர்பில் திருப்தியுறுகின்றனர்.

### 5.2 தொழில்சார் உள்ளூர் தலைமைத்துவம்

உள்ளூர் பிரதேசங்களில் வெற்றிகரமான ஜனநாயகத்தினை உருவாக்குவதற்கு பலமான அரசியல் மற்றும் சமூகத் தலைமைத்துவங்கள் இன்றியமையாதவையாகும். எனினும் பெறப்பட்ட தரவுகளின்படி மட்டக்களப்பு மாநகர சபையில் உறுதியான, கல்விகற்ற அரசியல் தலைமைத்துவம் இல்லை என்ற விடயம் கண்டறியப்பட்டுள்ளது. அவ்வாறே, உள்ளூர் ஆட்சிச் செயற்பாட்டில் பங்கேற்கும் தொழில்சார்ந்த அதிகாரிகளும் சிறந்த தலைமைத்துவத்தினை வழங்குவதில் போதுமான திறன்களைக் கொண்டிருப்பதில்லை எனச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

கல்வி, அரசியல் மற்றும் நிர்வாகப் பயிற்சியின்மை, அரசியல் தலைமைகளினதும் நிர்வாகிகளினதும் பொதுவான தெரிவு முறைகளில் உள்ள குறைபாடுகள், கல்வி கற்றவர்கள் அரசியல் ஈடுபாட்டினை பெருமளவு விரும்பாமை, கட்சிசார் அரசியல் ஆதிக்கம், மக்கள் கல்விகற்ற அரசியல் தலைமைகளில் அக்கறை காட்டாமை, நீண்டகால முரண்பாட்டு அனுபவம், தூரநோக்கற்ற நிர்வாகத் தலைமைத்துவம் போன்றன சிறந்த தொழில்சார் உள்ளூர் தலைமைத்துவத்தினை மட்டக்களப்பு மாநகர சபையில் ஏற்படுத்த முடியாமைக்கான காரணங்களாக சுட்டிக்காட்டப்படுகின்றன. “மாநகர சபைக்குத் தெரிவு செய்யப்படுகின்ற பெருமளவான உறுப்பினர்கள் கட்சி அங்கத்தவர்களாகவே உள்ளனர். சுயேட்சை அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படினும் அவர்களும் ஏதோவொரு வகையில் கட்சித் தொடர்பினைக் கொண்டிருக்கின்றனர். மேலும் நீண்டகாலமாக இன முரண்பாட்டினால் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக இப்பிரதேசம் விளங்கியமையால் மக்கள் போராட்ட பின்புலங்களைக் கொண்ட தலைவர்கள் மீது நம்பிக்கை வைக்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது. அதாவது அரசியல் தலைமைத்துவங்களை நிர்ணயிப்பதில் போராட்டம் ஒரு கருவியாக நின்று தொழிற்படுகின்றது” (நேர்காணல் இல.11).

தொழில்சார் அரசியல் மற்றும் நிருவாகத் தலைமைத்துவங்களின் அவசியம் தொடர்பில் பரந்தளவான மக்கள் அபிப்பிராயம் காணப்படுகின்ற போதிலும் மட்டக்களப்பு மாநகர சபையில் அத்தகைய போதிய தொழில்சார் அரசியல் மற்றும் நிருவாகத் தலைமைத்துவங்கள் இல்லை என்ற விடயம் சுட்டிக்காட்டப்படுகின்றது. மட்டக்களப்பு மாநகர சபையில் அடையாளப்படுத்தத்தக்க தொழில் சார்ந்த அரசியல் மற்றும் நிருவாகத் தலைமைத்துவம் ஏதேனும் உண்டா? எனக் கேட்கப்பட்ட கட்டமைக்கப்பட்ட வினாவுக்கு பதிலளித்த கணிசமான தொகையினர் அத்தகையதொரு தலைமைத்துவம் இல்லை எனப் பதிலளித்துள்ளனர். எனினும் ஒரு சிறு தொகையினர் அவ்வாறான தலைமைத்துவங்களை மட்டக்களப்பு மாநகர சபையினுள் அடையாளப்படுத்த முடியும் என அபிப்பிராயப்படுகின்றனர். மிகச் சிறியளவிலான மற்றுமொரு பகுதியினர் அது தொடர்பில் பதிலளிக்கவில்லை.

### 5.3 சமத்துவமும் உள்வாங்கலும்

உள்ளூர் மட்டங்களில் பங்கேற்பு மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினை உறுதி செய்து, நல்லாட்சியினை கட்டியெழுப்புவதற்கு சமத்துவத்தினை நடைமுறைப்படுத்துவது இன்றியமையாததாகும். அவ்வாறே வேறுபட்ட சமூகக் கட்டமைப்பினைக் கொண்ட பிரதேசங்களில் உள்ளூர் மன்றுகள் சமூகத்தின் பல்தரப்பட்ட பகுதியினையும் பிரதிநிதித்துவம் செய்யத்தக்கதாக இருக்க வேண்டியதும் அவசியமாகும்.

எனினும் சேவைகளை முறையாகப் பங்கிட்டு சமூக நீதியின் அடிப்படையில் சேவை வழங்கல் நிலையினை ஏற்படுத்துவதில் மட்டக்களப்பு மாநகர சபை இன்னும் சவால்களையே எதிர்நோக்குகின்றது. போதுமானளவு நிதியினைப் பெற்றுக்கொள்வதில் நெருக்கடிகளை எதிர்நோக்குவதால் மக்களின் தேவைகளுக்கு ஏற்றவிதத்தில் சமச்சீரான சேவை வழங்கல் நடைமுறையொன்றினை அதனால் உறுதி செய்யமுடியாதுள்ளது.

இது தொடர்பில் மாநகர சபைப் பிரதிநிதி ஒருவரிடம் வினவப்பட்ட போது, “பல மூலங்களிலிருந்து நிதியினைத் திரட்டுவதற்கு மாநகர சபைக்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள போதிலும் அவற்றினை முறையாக செயற்படுத்துவதில் பல நடைமுறைப் பிரச்சினைகள் உள்ளன. இதனால் மாநகர சபையின் சமூக சேவை வழங்கலானது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே இடம்பெறுகின்றது.

இது சிலவேளைகளில் சமச்சீரின்மை பிரச்சினைகளை ஏற்படுத்திவிடுவதுண்டு. சமூக உள்வாங்கல் தொடர்பிலும் சில சிக்கல்கள் காணப்படுகின்றன'' என்று குறிப்பிட்டார் (நேர்காணல் இல.3).

சமூக உள்வாங்கலைப் பொறுத்தவரையில் தமிழ், முஸ்லிம் பிரதிநிதித்துவ உள்வாங்கல் சபையில் இடம்பெற்றிருந்தமையினை அவதானிக்கலாம். இதன்படி சபையின் மொத்த 19 உறுப்பினர்களுள் 18 பேர் தமிழர்களாகவும் ஒருவர் மட்டும் முஸ்லிமாகவும் உள்ளனர். இப்பிரதேசத்தில் மிகச் சிறியளவில் சிங்களவர்கள் வாழ்கின்ற போதிலும் மாநகர சபையில் அவர்களால் பிரதிநிதித்துவம் பெறமுடியாத ஒரு நிலை உள்ளது. அதேவேளை, பால்நிலை சமத்துவம் என்பது சபையில் முறையாக பேணப்படவில்லை. மாநகரப் பிரதேசத்தின் சனத்தொகையில் பெருந்தொகையினர் பெண்களாக இருக்கின்ற போதிலும் சபையின் மொத்த 19 உறுப்பினர்களுள் ஒருவர் மட்டுமே பெண் உறுப்பினர் ஆவார். குறித்த பெண் உறுப்பினரே மாநகர சபையின் முதல்வராகச் செயற்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

போதுமானளவு பெண்கள் பிரதிநிதித்துவத்தினை சபையில் உறுதி செய்ய முடியாமற் போனமைக்கான காரணம் குறித்து வினவப்பட்ட போது, ''பாரம்பரிய அரசியல் செயற்பாட்டில் ஆண்களின் அரசியல் தலைமைத்துவத்தினையே மக்கள் அங்கீகரித்து வந்துள்ளனர். இப்பிரதேசத்தில் உள்ள பெருந்தொகையான பெண்கள் அரசியலில் ஈடுபடுவதனை விரும்புவதும் இல்லை. அரசியல் கட்சிகளும் அவர்களைத் தூண்டுவதில்லை. கட்சி அரசியல் கட்டமைப்பில் பெண்களுக்கு உரிய இடம் வழங்கப்படாமையினால் கட்சிகளின் கணிசமான தீர்மானங்கள் பெண்களை நோக்கியதாக இருப்பதில்லை. பெரும்பாலான பெண்கள் அரசியலை வெறுக்கின்ற ஒரு நிலையும் காணப்படுகின்றது'' (நேர்காணல் இல.11).

இது தொடர்பில் உள்ள மக்கள் அபிப்பிராயத்தினை நோக்குகின்ற போது, பெருந்தொகையானோர் (81 பேர்) சேவை வழங்கலில் பாரபட்சம் காட்டப்படுகின்றது எனக் குறிப்பிட்டுள்ளனர். சுமார் 7 பேர் மட்டுமே சபையின் சமச்சீரான சேவை வழங்கல் செயற்பாட்டிலும் சமூக உள்வாங்கலிலும் திருப்தியுறுகின்றனர். இருவர் கருத்துக்கள் எதனையும் தெரிவிக்கவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

### 5.4 வெளிப்படைத்தன்மை

ஆட்சிச் செயன்முறையில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்வது ஜனநாயகத்தின் பிரதான விழுமியங்களுள் ஒன்றாகும். அரசாங்க அலுவல்களும் நிதிசார் நடைமுறைகளும் பிரஜைகளுக்கு தெளிவாகத் துலங்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். எனினும் இவ்வாய்வுக்கு சேகரிக்கப்பட்ட தரவுகளின்படி மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட ஆட்சி நடைமுறைச் செயற்பாடுகளில் வெளிப்படைத் தன்மையினை உறுதி செய்யும் விடயத்தில் அச்சபை மேலும் முன்னேற்றங்களை காணவேண்டியுள்ளது.

மாநகர சபைப் பிரதிநிதிகள், ஊழியர்கள் என்போரிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் படி மாநகர சபை அதன் ஊழியர்களுக்கும் மக்களுக்கும் வெளிப்படையாக இருப்பதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது. ''மாநகர முதல்வர் எந்தவொரு செயற்பாட்டினைச் செய்வதற்கு முன்னரும் மாநகர சபையின் இதர பிரதிநிதிகள் மற்றும் ஊழியர்களது கலந்தாலோசனைகளைப் பெற்ற பின்னரே நடவடிக்கை மேற்கொள்கின்றார். இது தொடர்பில் மக்களுக்கு விழிப்பூட்டும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன'' என்கிறார் மாநகர சபையின் ஊழியர் ஒருவர் (நேர்காணல் இல.10).

இது தொடர்பில் கருத்துக் கூறும் சிவில் சமூகப் பிரதிநிதியொருவர், ''மாநகர சபை அரசியல் நலன் நோக்கில் செயற்படுவதனால் குறிப்பிட்ட சில விடயங்களில் வெளிப்படைத் தன்மையுடன் நடந்து கொள்கின்ற போதிலும் சகல விடயங்களும் மக்களுக்குத் துலங்கும் வகையில் இடம்பெறுவதில்லை. அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் செலவீனங்கள் ஒப்பந்தக்காரர்களின் வசதிக்கு ஏற்றவிதத்தில் வடிவமைக்கப்பட்டு மக்களுக்கு வெளிப்படுத்தப்படுகின்றன'' எனச் சுட்டிக்காட்டுகின்றார் (நேர்காணல் இல.11).

''மாநகர சபை வரிகளை வசூல் செய்தல், ஏனைய மூலங்களிலிருந்து நிதிகளைத் திரட்டுதல், அவற்றினை செலவிடுதல், அபிவிருத்தித் திட்டங்களை அடையாளம் காணுதல், அது தொடர்பிலான செயற்திட்டங்களை வடிவமைத்தல், திட்டங்களை அமுலாக்கம் செய்தல், எதிர்காலத்திற்கான நிகழ்ச்சித்

திட்டங்களை உருவாக்குதல் போன்ற அனைத்துச் செயற்பாடுகளிலும் மாநகர சபை மிகவும் வெளிப்படையாக நடந்து கொள்கின்றது'' என்கிறார் மாநகர சபை உறுப்பினர் ஒருவர் (நேர்காணல் இல.7).

எனினும் பொதுமைப்படுத்தப்பட்ட கருத்தில் வெளிப்படைத் தன்மையான செயற்பாட்டு நடத்தையில் மாநகர ஆட்சி முழுமையான வெற்றியினைப் பெறவில்லை. அரசியல் ஆதாயங்களைப் பெறவும் அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்கான ஒப்பந்தக்காரர்களாகச் செயற்படவும் மக்கள் பிரதிநிதிகள் ஆர்வம் காட்டுவதினால் அவை தொடர்பில் மிகவும் வெளிப்படையாகச் செயற்படுவதில் மாநகர ஆட்சியாளர்கள் விருப்பம் கொள்வதில்லை. மாநகர சபையின் உள்ளூர் அபிவிருத்திகள் தொடர்பாக மக்களிடமிருந்து பெறப்பட்ட அபிப்பிராயங்களிலிருந்து இம் முடிவினைப் பெறமுடிகின்றது.

இது தொடர்பில் கருத்துக் கூறிய ஒருவர், ''அரசியல்வாதிகள் தேர்தல் காலங்களில் மட்டும் தம்மை அணுகி வாக்குறுதிகளை அள்ளி வழங்குகின்றனர். தேர்தல் முடிந்த கையோடு அவர்கள் தம்மை பொருளாதார ரீதியாக விருத்தி செய்து கொள்வதிலேயே கவனம் செலுத்துகின்றனர். எமது வரிப் பணம் எவ்வாறு செலவிடப்படுகின்றது என்பது எமக்கு முறையாகத் தெரியப்படுத்தப்படுவதில்லை. எமக்காக என்னென்ன வேலைத்திட்டங்களை சபை மேற்கொள்கின்றது, அவற்றுக்கு எவ்வளவு தொகை பணம் செலவிடப்படுகின்றது என்பதும் எமக்கு தெளிவாகத் தெரிவதில்லை'' என குறிப்பிட்டார் (நேர்காணல் இல.12).

மாநகர சபையின் வெளிப்படைத் தன்மை தொடர்பிலான கட்டமைக்கப்பட்ட வினாவுக்குப் பதிலளித்த 69 பேர் மாநகர ஆட்சியில் வெளிப்படைத் தன்மை என்பது மிகச் சிறப்பானதாக இல்லை (திருப்திகரமற்றது) எனப் பதிலளித்துள்ளதுடன் 12 பேர் சிறப்பான நிலையில் உள்ளது எனக் குறிப்பிட்டுள்ளனர். குறிப்பிடத்தக்கவகையில் 7 பேர் சபையின் வெளிப்படைத் தன்மை மிகச் சிறப்பான நிலையில் உள்ளது எனக் கூறியுள்ளதுடன் இருவர் கருத்துக்கள் எதனையும் குறிப்பிடவில்லை.

### 5.5 பொறுப்புக்கூறல்

உள்ளூராட்சி அரசாங்கங்கள் மேல் நோக்கிய மற்றும் கீழ் நோக்கிய வழியிலான இரு வகைப் பொறுப்புக்கூறல் முறையினைக் கொண்டிருக்கின்றன. இவ்வகையில் இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்கள் மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி அமைச்சருக்கும் கொண்டிருக்கும் பொறுப்புக்கூறல் முதல் வகையினைச் சேர்ந்ததாகும். இது அரசியல், நிதி, சட்ட மற்றும் நிருவாக பொறுப்புடைமையினை உள்ளடக்கியது எனவும் பொது மக்களுக்கான பொறுப்புக்கூறல் மாதிரியினைக் கொண்டது அல்ல. எனினும் இவ்வகைப் பொறுப்புக்கூறல் உள்ளூர் ஜனநாயகத்தின் அடிப்படைத் தன்மையினை விளக்குவதில்லை. இரண்டாவது வகைப் பொறுப்புக் கூறல் பிரஜைகளுக்கும் தேர்வாளர்களுக்கும் உரியதாகும். உள்ளூர் நிறுவனங்களின் பிரதிநிதிகளைத் தெரிவு செய்த வாக்காளர்களுக்கும் பிரஜைகளுக்கும் சபை நிறைவேற்றும் பொறுப்புடைமையினை இது குறிக்கும். எனினும் இவ்வகைப் பொறுப்புடைமையினை நிறைவேற்றுவதில் மட்டக்களப்பு மாநகர சபை இன்னும் போதுமான வெற்றியினைக் காணவில்லை.

மாநகர ஆட்சியில் பொறுப்புக்கூறல் என்ற அம்சம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள போதிலும் அரசியல் காரணங்களுக்காக நடைமுறையில் பொறுப்புக்கூறல் முறையாகச் செயற்படுத்தப் படுவதில்லை என்ற குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பில் கருத்து வெளியிட்ட சிவில் சமூகப் பிரதிநிதி ஒருவர், ''மாநகர சபை நிதி மற்றும் அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பில் தமது பொறுப்புடைமையினை முறையாக நிறைவேற்றுவதில்லை. தேர்தல் காலங்களில் மக்களுக்கு வாக்குறுதிகள் பல வழங்கப்படுகின்ற போதிலும் பதவிக்கு வந்த பின்னர் பிரதிநிதிகள் தமது பொறுப்புக்களிலிருந்து தூர விலகிச் செல்கின்றனர். மக்களுக்குப் பொறுப்புக்கூறுகின்ற விடயத்தில் அலட்சியமாக உள்ளனர். பிரதிநிதிகள் தலைமைகளுக்கு கட்டுப்படுகின்றார்களே தவிர தமது பிரதேச வாக்காளர்களுக்குப் பொறுப்புடையவர்களாகஇருப்பதில்லை'' என்கிறார் (நேர்காணல் இல.12).

எனினும் மாநகரப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போது கருத்து வெளியிட்ட ஒருவர், ''மாநகர சபை தீர்மானங்களை எடுக்கின்ற போதும் அவற்றினை நடைமுறைப்படுத்தும் போதும் வெளிப்படைத் தன்மையுடன் நடந்துகொள்கின்றது. குறித்த வேலைத்திட்டங்கள்,

அவற்றுக்கான செலவீனங்கள் தொடர்பில் முறையான முகாமைத்துவக் கட்டமைப்பினைக் கொண்டுள்ளதுடன் அது விடயத்தில் உள்ள பொறுப்புக்கூறல் கடமையினையும் முறைப்படி நிறைவேற்றுகின்றது. சட்ட விதிகள் தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு சபை செயற்படுகின்ற போது சிலர் அதனை பொறுப்புடைமையிலிருந்து விலகிய செயற்பாடாக அர்த்தப்படுத்தக் கூடாது'' என்கிறார் (நேர்காணல் இல.6).

இது தொடர்பில் உள்ள மக்கள் பார்வையினை அவதானிக்கின்ற போது பொறுப்புக்கூறல் தொடர்பான வினாவுக்குப் பதிலளித்த 69 பேர் மாநகர சபை தனது பொறுப்புடைமையினை முறையாக நிறைவேற்றுவதில்லை எனக்குறிப்பிட்டுள்ளனர். 15 பேர் மாநகர சபையின் பொறுப்புடைமைச் செயற்பாட்டில் திருப்தியுறுகின்றனர். 6 பேர் குறித்த கேள்வி தொடர்பில் கருத்துக்கூற விரும்பவில்லை.

**5.6 பிரஜைகள் பங்கேற்பு**

மட்டக்களப்பு மாநகர ஆட்சிச் செயற்பாட்டில் மக்கள் பங்கேற்புக்கான பரந்தளவு வாய்ப்புக்கள் உள்ள போதிலும் நடைமுறையில் பிரஜைகளின் பங்கேற்பு என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவிற்கு வெற்றிகரமானதாக இல்லை. கட்சிசார் அரசியலால் உந்தப்பட்ட உள்ளூர் மட்ட பிரஜைகள் வாக்கெடுப்பில் பெருமளவுக்கு படையெடுக்கின்ற போதிலும் உள்ளூர் ஆட்சி நிறுவனங்களின் ஏனைய ஆட்சி நிர்வாகச் செயற்பாடுகளில் தமது பங்கேற்பினை முழுமையாக உறுதி செய்வதில்லை.

தேசிய மற்றும் உள்ளூர் பிரதேசங்களின் ஆட்சியுடன் தொடர்புடைய பொது அலுவல்கள் மக்கள் மீது கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்துவதனால் அவ்வலுவல்களில் பிரஜைகள் பங்கேற்பது மிகவும் இன்றியமையாதது. எனினும் இப்பிரதேசத்தில் உள்ள பிரஜைகள் அது தொடர்பில் விழிப்புணர்வற்றவர்களாகவே உள்ளனர். மாநகர சபைச் சட்ட ஏற்பாடுகளின் படி உள்ளூராட்சி மன்றக் கூட்டங்களில் பங்கேற்பதற்கும் கணக்காய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் செயற்குழுக்களில் அங்கம் வகிப்பதற்கும் பிரஜைகளுக்கு உரிமை உள்ள போதிலும் பிரஜைகள் ஆட்சிச் செயற்பாட்டில் தமது பங்கேற்பினை உறுதி செய்வதில் அசிரத்தை கொள்கின்றனர். எனினும் நிர்வாக நடைமுறைகளின் நிமித்தம் பிரஜைகளின் பங்கேற்புடன் கூடிய செயற்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது.

பெண்களின் அரசியல் பங்கேற்பினைப் பொறுத்தவரையில் இம்மாநகர சபை பின்தங்கிய நிலையில் உள்ளதனை அவதானிக்கலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று கடந்த மாநகர சபையில் ஒருவர் மட்டுமே பெண் பிரதிநிதியாகச் செயற்பட்டார். இப்பிரதேசத்திற்குட்பட்ட சனத்தொகையில் பெண்கள் கணிசமான தொகையினராக இருப்பினும் அவர்களால் குறிப்பிடத்தக்க பிரதிநிதித்துவத்தினை உறுதி செய்யமுடியவில்லை. மக்கள் பங்கேற்புக்கு உள்ள இதர வழிகளிலும் பெண்களின் ஈடுபாடு குறிப்பிட்டுக் கூறக்கூடியளவிற்கு இல்லை என்பதனை ஆய்வுக்கென சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து அறியமுடிகின்றது. மாநகர சபையின் செயற்குழுக்களில் பெண்கள் நியமிக்கப்படுவதும் மிக அரிதாகவே உள்ளது. மாநகர சபை செயற்பாடுகளில் பங்கேற்றல், முறைப்பாடுகளைச் சமர்ப்பித்தல், பொதுக் கலந்துரையாடலில் பங்குபற்றல் போன்றவற்றிலும் பெண்கள் குறைந்தளவிலேயே பங்கேற்கின்றனர்.

பங்கேற்பு வரவுசெலவுத்திட்ட முறையினூடாக மாநகர சபை மக்கள் பங்கேற்பினை உறுதிசெய்வதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் மேற்கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. சபையின் வரவு செலவுத்திட்டங்களை மக்களுக்குத் தெரியப்படுத்துகின்ற போதிலும் மக்கள் அதற்கு துலங்கும் விதம் குறைந்த மட்டத்திலேயே உள்ளது.

மேலும் சபையின் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் மக்கள் பங்குபற்றலினை உறுதி செய்வதற்கு வசதியளிக்கத்தக்க வகையில் பொதுமக்கள் பார்வை அரங்கத்திற்கான ஏற்பாடுகள் உள்ள போதிலும் சபை நடவடிக்கைகளின் போது குறிப்பிட்டுக் கூறக்கூடிய மக்கள் பங்கேற்பு அங்கு இருப்பதில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் சபையின் நடவடிக்கைகளை அவதானிக்கத்தக்க மக்கள் பங்கேற்பு சிறிதளவேனும் இருப்பதில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. எனினும் முக்கியமான சந்தர்ப்பங்களில் மட்டும் ஊடகவியலாளர்களின் பிரசன்னம் இடம்பெறுவது அவதானிக்கப்பட்டது.

இவ்வாறாக மட்டக்களப்பு மாநகர சபையில் மக்கள் பங்கேற்புத் தொடர்பில் பிரச்சினைகள் நிலவுவதற்கான காரணங்களை ஆராய்கின்ற போது, ''பிரதிநிதிகளும் மாநகரத் தலைமைகளும்

*அதிகாரத் தலைவர்களாக இருப்பதனால் அவர்கள் மக்கள் கருத்தினைச் செவிமடுப்பதில்லை. மக்களுடன் இணைந்து கருமமாற்றுவது தமது செயற்பாடுகளுக்குத் தடங்கலாக அமையும் என பிரதிநிதிகள் கருதுகின்றனர். இதனால் பிரதிநிதிகள் மக்களுடன் இணைந்து கருமமாற்றுவதில்லை. மேலும் மக்கள் நீண்டகாலமாக யுத்தத்தின் பாதிப்புகளுக்கு உட்பட்டிருந்தமையினால் அரசியல் உறுப்புக்களில் அவர்கள் அதிகளவு நம்பிக்கையற்றவர்களாக உள்ளனர். தமது பங்கேற்பின் மூலம் பயனுள்ள திட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர்கள் கருதுவதாக இல்லை" (நேர்காணல் இல.8).*

*மக்கள் பங்கேற்பு தொடர்பாகப் பெறப்பட்ட வினாக்கொத்து பகுப்பாய்வு முடிவின் பிரகாரம் கணிசமான தொகையினர் வாக்களிப்பதில் பங்கேற்பதாகக் குறிப்பிட்டுள்ளதுடன் இதர தீர்மானம் எடுத்தல் வழிகளில் தாம் பங்குபற்றலினைக் கொண்டிருக்கவில்லை என 84 பேர் குறிப்பிட்டுள்ளனர். 4 பேர் தமது பங்கேற்புத் தொடர்பில் திருப்தியுறுகின்ற போதிலும் இருவர் கருத்துக்கள் எதனையும் பதிவுசெய்யவில்லை.*

**5.7 இணக்கப்பாடு**

*மட்டக்களப்பு மாநகர சபை தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களைக் கொண்டுள்ளது. கடந்த மாநகர சபையில் முஸ்லிம் பிரதிநிதியொருவரும் சபையில் பங்குபற்றியிருந்தார். ஏனைய அனைத்துப் பிரதிநிதிகளும் தமிழர்கள். எனினும் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டின் போது ஆளும் கட்சி, எதிர்க் கட்சி என்ற வேறுபாடுகள் காட்டப்படுவதாக குற்றஞ்சாட்டப்படுகின்றது. இது தொடர்பில் கருத்துவெளியிட்ட மாநகர மேயர், "எந்தவொரு நடவடிக்கையின் போதும் எந்தவொரு குழுவினையும் புறந்தள்ளிவிடாது இணக்கப்பாட்டுடன் முடிவுகள் எடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படுகின்றன. மாநகர சபையினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற விழாக்கள், நிகழ்வுகள் என்பவற்றுக்கு பல சமயத்தினைச் சேர்ந்தவர்களும் மார்க்க அறிஞர்களும் அழைக்கப்பட்டு அதன்மூலம் மாநகர சபைப் பிரதேசத்தில் இணக்கப்பாட்டு அம்சம் கடைப்பிடிக்கப்படுகின்றது" எனக்கூறினார் (நேர்காணல் இல.1).*

*எனினும் இந்தக்கருத்தினை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை. இது தொடர்பில் கருத்துவெளியிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர், "சபை எடுக்கின்ற எந்தவொரு முடிவிலும் தாம் உள்வாங்கப்படுவதில்லை. தமது கட்சியின் கருத்துக்களுக்கு மாநகர மேயர் உள்ளிட்ட சபையின் ஆளும்கட்சி உறுப்பினர்கள் மதிப்பளிப்பதில்லை. மொத்தத்தில் சபையில் ஆளும் தரப்பில் உள்ளவர்கள் தன்னிச்சையாக முடிவெடுத்து, தீர்மானங்களை நடைமுறைப்படுத்தும் நிலையே காணப்படுகின்றது. மக்கள் விருப்பம் எதுவென தெரிந்து கொண்டு செயற்படும் நிலையில் சபை இல்லை" என்று குற்றம் சாட்டுகின்றார் (நேர்காணல் இல.2).*

*சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் போதும் மாநகர சபை தமது தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டின் போதும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களை அமுலாக்கும் போதும் ஊழியர் ஆட்சேர்ப்பினை மேற்கொள்ளும் போதும் இணக்கப்பாட்டினை எட்டுவதற்கு குறித்த மாநகர சபை இன்னும் நீண்டதூரம் பயணிக்க வேண்டும் என்று கூறப்படுவதுடன் சபையின் அன்றாட செயற்பாடுகளில் கூட இணக்கப்பாடின்மைகள் நிலவுகின்றன என்ற விடயமும் இங்கு சுட்டிக்காட்டப்படுகின்றது.*

*இது தொடர்பிலான மக்கள் அபிப்பிராயமும் தெளிவாக உள்ளது. வினாக்கொத்துப் பகுப்பாய்வுக்கு உட்பட்ட 57 பேர் மாநகர சபை இணக்கப்பாட்டுடன் செயற்படவில்லை எனக் குற்றஞ்சாட்டுவதுடன் 31 பேர் சபை இணக்கப்பாட்டுடன் செயற்படுவதனை அங்கீகரிக்கின்றனர். இருவர் வழக்கம் போல் எந்தக் கருத்தினையும் குறிப்பிடவில்லை.*

**5.8 சட்டத்தின் ஆட்சி**

*பிரதேசத்தின் சட்டத்தின் ஆட்சி தொடர்பில், பொலிசார் பிரச்சினைகளை நன்கு ஆராயமல் செயற்படுதல், பொலிஸ் சேவையின் சுயாதீனமற்ற தன்மை, அரசியல் தலையீடுகள், ஊழல் ஆகிய நான்கு முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குட்படுத்தப்பட்டவர்களால் தெரிவிக்கப்பட்டன. அதேவேளை, ஆய்வுப் பிரதேசத்தின் சட்டத்தின் ஆட்சி தொடர்பில் பரவலான அதிருப்தி நிலவுவதும் அவதானிக்கத்தக்கது.*

மறுபுறம் வரிகளை வசூலிக்கும் செயற்பாட்டில் மாநகர சபை சட்டத்தினை முறையாகக் கடைப்பிடிப்பதில்லை என்ற விமர்சனமும் உண்டு. பொலிஸ் மற்றும் நீதிமன்ற சேவை தொடர்பிலும் ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட மக்களிடம் அதிருப்தியின்மை நிலவுகின்றது. இது தொடர்பில் கருத்து வெளியிடும் சிவில் சமூகப் பிரதிநிதியொருவர், ''சட்டத்தை அமுல்படுத்துபவர்கள் எம்மை ஏமாற்றுபவர்களாக உள்ளனர். குற்றம் செய்தவர்கள் ஊழல்கள் புரிந்து குற்றத்திலிருந்து தப்பித்துக்கொள்கின்றனர். பொறுப்பற்ற வழக்கறிஞர்கள் இதற்குத் துணை நிற்கின்றனர். அதேவேளை சட்டத்தை அமுல்படுத்துபவர்கள மீது அரசியல்வாதிகள் செல்வாக்குச் செலுத்தும் நிலையும் காணப்படுகின்றது. இதனால் மக்கள் பொலிஸ் சேவையில் நம்பிக்கையற்றுள்ளனர். முறைப்பாடுகளை மேற்கொள்வது தமக்கு நன்மையளிக்கும் என்று பெரும்பாலானோர் கருதுவதில்லை'' எனக் குறிப்பிட்டார் (நேர்காணல் இல.12).

நீண்டகாலமாக இப்பிரதேச மக்கள் இன முரண்பாட்டினால் மிகுந்த பாதிப்புக்கு உட்பட்டிருந்தமையே பொலிஸ் சேவை மீது அதிகளவு நம்பிக்கையீனம் ஏற்படுவதற்கு காரணம் என்ற விடயம் இலக்குக்குழுக் கலந்துரையாடலின் போது பலரால் சுட்டிக்காட்டப்பட்டது. குறிப்பாக, யுத்த காலத்தில் இடம்பெற்ற பல்வேறு மனித உரிமை மீறல்களும் பொலிஸ் சேவை மீது மக்களுக்கு நம்பிக்கைக் குறைவினை ஏற்படுத்தியுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக சில கடுமையான நடவடிக்கைகளை கடந்த காலங்களில் பொலிசார் பின்பற்றி வந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. மேலும் அரச நிறுவனங்களின் சட்ட அமுலாக்கச் செயன்முறையின் போது இன ரீதியான பாரபட்சம் காட்டப்படுவதாகவும் சிலர் குற்றம் சுமத்துகின்றனர்.

சட்டத்தின் ஆட்சி தொடர்பில் மட்டக்களப்பு மாநகரப் பிரதேசத்தினுள் காணப்படுகின்ற மக்கள் அபிப்பிராயத்தினை நோக்குகையில் 84 பேர் பிரதேசத்தில் உள்ள சட்டத்தின் ஆட்சி தொடர்பில் திருப்தியுறுகின்றனர். நான்கு பேர் சட்டத்தின் ஆட்சி தமது பிரதேசத்தில் நிலைநாட்டப்பட்டுள்ளது என அபிப்பிராயப்படுகின்ற அதேவேளை, இரண்டு பேர் கருத்துக்கள் எதனையும் கூறுவதற்கு விரும்பவில்லை.

## 6. முடிவுரை

உள்ளூர் ஜனநாயக சுட்டிகளைக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வு, அப்பகுப்பாய்வின் மூலம் பெறப்பட்ட முடிவுகள் என்பவற்றிலிருந்து நோக்கும் போது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மட்டக்களப்பு மாநகர சபை உள்ளூர் ஜனநாயகத்தினை ஏற்படுத்துவதில் பல்வேறு நெருக்கடிகளையும் சவால்களையும் எதிர்கொண்டுள்ளதனை அவதானிக்க முடிகின்றது. இச்சவால்களுக்கான பிரதான காரணங்களாக சுட்டிக்காட்டத்தக்கவை. உள்ளூராட்சி மன்றங்களின் தீர்மானம் எடுத்தலில் குறிப்பிடத்தக்க மக்கள் பங்குபற்றுதல் இன்மையும் அவற்றிற்கு வழங்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட அதிகாரமும் ஆகும். எனினும் மட்டக்களப்பு மாநகரம் சிவில் யுத்தகால பாதிப்புக்களிலிருந்து மீண்டு வந்திருக்கின்றது. இம்மாநகரம் இன்று துரித சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்தியினை வேண்டி நிற்கின்றது. அதற்கு ஏற்றவிதத்தில் நிறுவன மற்றும் தொழிற்பாட்டுசார் மறு சீரமைப்புக்களை மேற்கொள்ளும் போது குறித்த நெருக்கடிகளிலிருந்து இம்மாநகர சபையினை மீட்டெடுத்து உள்ளூர் ஜனநாயகத்தினை குறித்த பிரதேசத்தில் நிலைநிறுத்த முடியும்.

## உசாத்துணைகள்

Bigdon, C. (2006). *Good governance and conflict transformation in Sri Lanka: A political analysis of people's perceptions of institutions at the local level and the challenges of decentralized governance*. Unpublished Inaugural PhD thesis. Heidelberg University.

Ehsan, M. (2002). Rhetoric of local democracy in Bangladesh: An analysis of rural local government. *Asian Affairs, 24*(4): 44-76.

Hettige, S. (2008). Local democracy: The Sri Lankan experience. In D.N. Gellner, & Hachhethu, K. (Eds.), *Local democracy in South Asia: Microprocesses of democratization in Nepal and its neighbours*. New Delhi: SAGE Publications.

Kumar, G. (2006). *Local democracy in India*. New Delhi: SAGE Publications.

Leitan, G.R.T. (2010). *Overview of decentralization and local governance in Sri Lanka*. Colombo: Swiss Agency for Development Cooperation (SDC).

Mouritzen, P.E., Rose, L.E., & Denters, B. (2009). *Size and local democracy: A summary of findings from Switzerland, Norway, Denmark and the Netherlands*. Santiago.

Prachett, L. (2004). Local autonomy, local democracy and the new localism. *Political Studies, 52*(2): 358-375.

Soós, G. (2001). *The indicators of local democratic governance project: Concepts and hypotheses*. Hungary: Open Society Institute.

The Norwegian Association of Local Authorities and Department of Political Science, University of Oslo. (2009). *Norwegian project on indicators of local democracy*. Norway: The Norwegian Association of Local Authorities and Department of Political Science, University of Oslo.

Uyangoda, J., & De Mel, N. (Eds.) (2012). *Reframing democracy, perspectives on the cultures of inclusion and exclusion in contemporary Sri Lanka*. Colombo: Social Scientist Association.

புஞ்சிகேவா, எஸ்.ஜீ. (2007). *உள்ளூராட்சி சட்டங்கள்.* கொழும்பு: மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்.

மட்டக்களப்பு மாநகர சபை (2012). *புள்ளிவிபரத் திரட்டு - 2012.* மட்டக்களப்பு: மட்டக்களப்பு மாநகர சபை.